*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p130-135** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பண்டைய கால மகளிரின் வாழ்வியல்

The Lifestyle of Ancient Women as Depicted in Sangam Literature

**முனைவர் மு. நளா**
உதவிப்பேராசிரியர் வரலாற்றுத்துறை,
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி) சேலம் – 636016.
மின்னஞ்சல் முகவரி – mnalanand@gmail.com

## Abstract

Sangam literature constitutes a significant body of ancient literary records documenting the lives of the early Tamils. Through the two major thematic categories of Akam (inner life/love) and Puram (outer life/public affairs), these texts provide a detailed account of the people's experiences—encompassing love, family life, food, clothing, occupations, agriculture, trade, hospitality, generosity, valor, politics, arts, their relationship with nature, and social culture. Works such as Akananuru, Purananuru, Natrinai, Kuruntokai, Ainkurunuru, Pattinappalai, and Porunaratruppadai serve as primary literary sources for understanding the daily lives of the ancient Tamils. These texts reveal the nature of the lives led by women during the Sangam era, acting as a mirror that reflects their commitment to truth, their unwavering adherence to righteousness (Aram), and their loving nature. This research paper aims to systematically analyze and elucidate these aspects.

## ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்க்கையைப் பதிவு செய்துள்ள மிகப் பழமையான இலக்கிய ஆவணங்களுள் குறிப்பிடத்தக்கவை. அகம், புறம் என்ற இரு பெரும் வாழ்க்கை நிலைகளின் வழியாக அக்கால மக்களின் காதல், குடும்பம், உணவு, உடை, தொழில், வேளாண்மை, வாணிகம், விருந்தோம்பல், கொடை, வீரம், அரசியல், கலை, இயற்கையோடு கொண்டிருந்த உறவு, சமூகப் பண்பாடு ஆகியவை விரிவாகப் பதிவாகியுள்ளன. குறிப்பாக அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை போன்ற நூல்கள் பண்டைய தமிழரின் அன்றாட வாழ்வை அறிந்துகொள்ள முதன்மையான இலக்கியச் சான்றுகளாகத்

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

திகழ்கின்றன. சங்ககாலத்தில் பெண்கள் எத்தகைய வாழ்க்கையை வாழ்நதுள்ளனர் என்பதை இந்த இலக்கியங்களே வெளிப்படுத்துகின்றன. சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகவும், அறத்திலிருந்து துளியும் மீறாதவர்களாகவும், அன்பு மிக்கவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாக இந்த இலக்கியங்கள் திகழ்கின்றன. அவற்றை முறையாக ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வு நோக்கம்

எந்தவகையான அறிவியல் வளர்ச்சியும் இல்லாத பண்டைய காலத்தில் வாழ்ந்த பெண்கள் எவ்வாறு ஒழுக்கத்தில் சிறந்த வாழ்வியலை வாழ்ந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அனுகுமுறை

சங்ககால பெண்களின் அன்பு கலந்த வாழ்வியல், வீரம் கலந்த வாழ்வியல், கற்புநெறி தவறாத வாழ்வியல், இல்லறம் காத்த வாழ்வியல், அன்னையாய் உயர்ந்த வாழ்வியல் போன்ற வாழ்வியல் முறைகளை சங்க இலக்கியங்கள் வழி ஆராய்ந்து எடுத்துரைப்பதால் இந்த ஆய்வுக்கட்டுரை விளக்கமுறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## திறவுச் சொற்கள்

தமிழர் வாழ்வியல், அகநானூறு, புறநானூறு, வேளாண்மை, வாணிகம், விருந்தோம்பல், கொடை, பண்பாடு

## முன்னுரை

சங்க ,லக்கியங்களான அகநானூறு குறிப்பாக காதல் மற்றும் குடும்ப வாழ்க்கையின் பல்வேறு நிலைகளை வெளிப்படுத்துகிறது. அதேவேளையில் புறநானூறு அரசியல், போர், கொடை, புலவர்–மன்னர் உறவு, சமூக வாழ்க்கை போன்ற புறவாழ்வுக் கூறுகளைப் பதிவு செய்கிறது. எனவே, சங்க இலக்கியங்களை "பண்டைய தமிழரின் வாழ்வியல் ஆவணம்" எனக் கருதுவதில் மிகுந்த பொருத்தம் உள்ளது. இத்தகைய சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளைப் படம் பிடித்துக் காட்டுவன. அதனால் தான் சங்க இலக்கியங்கள் தமிழர்களின் இரு கண்களாகத் திகழ்கின்றன. சங்க காலத்தில் பெண்கள் வீரமிக்கவராகளாகவும், புலமை பெற்று அரசர்களுக்குக்கூட அறிவுரை வழங்கியும் வாழ்ந்துள்ளனர். மேலும் விருந்தோம்பல் என்ற தலையாயப் பண்பைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். இத்தகைய சிறப்புகளையெல்லாம் பெற்றுள்ள பெண்களின் வாழ்வியலை சங்க இலக்கியங்கள் கொண்டு ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## கற்பு நெறியில் பெண்கள்

பெண்கள் இல்லாத சமூகம் வெறுமையுற்றது. இவ்வுலகில் பெண்மையைப் போற்ற வேண்டும். "சங்ககாலப் பெண்கள் ஆண்கள் அளவிற்குச் சமவுரிமை பெறவில்லை என்றாலும் அடிமைகளாய், வாழமுடியாதவர்களாய் ஒருபோதும் இருந்ததில்லை. சமயம், கல்வி, காதல்

ஆகியவற்றில் உரிமை மகளிராய்த் திகழ்ந்தனர் என இறையரசன் கூறுவது வண்மையானது. சங்க காலத்தில் நச்செள;ளையார், நல்முல்லையார், ஆதி மந்தியார், நப்பசலையார், முடத்தாமக் கண்ணியார், பொன்முடியார், காக்கைப் பாடினியார், ஒளவையார் போன்ற பெண்பால் புலவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியுள்ளனர். அவர்களின் செருக்குப் பற்றிக் கூறும்போது,

***"எத்திசைச் செல்லினும், அத்திசைச் சோறே"***

***(புறம்:206 :13)***

எனக் குறிப்பிட்டுள்ளனர்.

என்னிடம் புலமை இருக்கிறது. நான் எந்த ஒரு மன்னனையாவது புகழ்ந்து பாடிப் பரிசினைப் பெற்று விடுவேன். நீ இல்லையென்றால் என்ன? எனக்கு எந்தத் திசைச்சென்றாலும் சோறு கிடைக்கும் என ஒளவையார் அதியமானிடம் கேட்பதிலிருந்து பெண்களுடைய உயர்வை சங்ககாலத்தில் நலமாக உள்ளது என அறியலாம்.

***"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்***
***சேயிர் தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றென"***

***(தொல்.பொருள். களவு :23)***

பெண்களுக்கு உயிரைவிட நாணமே சிறந்தது என்றும், அந்நாணத்தைவிடக் குற்றமில்லாத கற்புதான் சிறந்தது எனத் தொல்காப்பியரும் பெண்ணினுடைய கற்பின் சிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார். கற்பு என்பது தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதன் மேற்கொள் என்பர் நச்சினார்க்கினியர். சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பெண்கள் சுதந்திரமாகவும், அதே நேரத்தில் தன்னுடைய தலைவனைத் தானே தெரிவு செய்யும் மனப்பான்மையும் பெற்றிருந்தனர். தங்கள் தலைவர்களோடு தினைப்புனம், காடு, வயல், கடற்கரை மணல், சுனை போன்ற இடங்களில் காதலை வளர்த்துக் கொண்டார்கள்.

***"நிலத்தினும் பெரியதே, வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆர் அளவின்றே".***

***(குறுந் : 3 : 1)***

இங்குத் தலைவனோடு தலைவி கொண்ட காதலானது நட்பு, மொழி, மனம், மெய் என்பதைக் கடந்து நிற்பது ஆகும். நிலம், வான், நீர் என மூன்றினையும் விட உயர்ந்தது என்கிறார் தேவகுலத்தார். ஊரில் ஏற்பட்ட அலரால் தலைவியுடைய காதல் பெற்றோருக்குத் தெரிய வருகிறது. பெற்றோரும் எதிர்ப்பு தெரிவிக்கும் நேரத்தில் தலைவி தன் தலைவனோடு உடன்போக்குச் செல்வதற்கும் தயங்கமாட்டாள் என்கிறது சங்க இலக்கியப் பாக்கள்.

### துள்ளித் திரிந்த மகளிர்

எப்போதும் மகிழ்ச்சியும் மனநிறைவுமாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள் மகளிர். இல்லையென்றால் குறிஞ்சிப் பாட்டிலே தலைவவி ஒருத்தி தன் தோழிகளுடன் சுனை நீராடுகையில் அங்கே இருக்கும் கற்பாறையில் தொண்ணூற்று ஒன்பது வகையான மலர்களைப் பறித்து வைத்து அழகு பார்த்திருக்கமாட்டாள்.

***"பொலம் செய் கழங்கின் தெற்றி ஆகும்"***

***(புறம் : 36 : 4)***

அழகிய வளையல்களை அணிந்த மகளிர்கள் வண்டல் மண்ணால் பார்வை செய்வதும், மணல் மேட்டில் சுழற்சிக் காய்களை ஒருவருக்கொருவர் வீசி விளையாடுவதும், பொற்சிலம்பு ஒலிக்க மேல்நிலை மாடத்தில் பந்தாடுவதையும், சுனை நீராடல், சிற்றில் இழைத்தல், துணைங்கையாடல், குரவை ஆடல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவது மாக இருந்துள்ளனர்.

**நல்லறமே இல்லறம்**

ஒவ்வொரு மனிதனுக்கும் திருமணம் தவிர்க்க முடியாதது. தன்னைத் திருமணப் பந்தத்திலே ஈடுபடுத்தி வாழ்க்கையை முழுமை ஆக்குகின்றான். ஒவ்வொரு பெண்ணும் தனக்கு எவ்வாறு கணவன் அமைய வேண்டும் எனக் கனவு காண்பான். அக்கால மகளிரும் தனக்கு வாய்க்கும் கணவன் வீரம் உடையவனாகவும், அஞ்சா நெஞ்சம் உடையவனாவும் இருக்க வேண்டுமென விரும்பினர். காளையை அடக்கும் வீரர்கள், வட்டக்கல் தூக்கும் வீரர்களுக்கே தங்கள் மனதினைப் பறிகொடுத்தனர். வீரம் இல்லாத ஆண்களை வேண்டாம் என ஒதுக்கினர் என்பதை,

***"கொல் ஏற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும்***
***புலலாளே, ஆய மகள்"***
***(கலித் : 103)***

கலித்தொகை தலைவி மறுபிறப்பும் கூட அந்த வீரமற்றவனைத் திருமணம் செய்ய மாட்டேன் என்கிறாள். சங்க இலக்கியத்தில் ஒத்த வயதுடைய தலைவனும் தலைவியும் கால் கொண்டு திருமணம் செய்யலாம் என்கிறது. தலைவியின் திருமணத்தின் போது, பந்தலிட்டு, புதுமணல் பரப்பி, மனை விளக்கு ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர் என்றும், புதல்வனைப் பெற்றெடுத்த மகளிர்கள் நெல்லும் மலரும் கலந்ததை அம் மணமக்கள் மேல் தூவி வாழ்த்துவதாகக் கூறுகிறது. (அகம் :86) நல்ல நேரம் பார்த்தல், சகுனம் பார்த்தல், திருமணத்தின் போது உணவு பரிமாறுதல் (அகம் :136) முரசு கொட்டுதல் போன்ற நிகழ்வுகள் சங்க காலத்தில் இருந்ததாக அறிகின்றோம். ஆனால் அக்காலத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. மலைப்பகுதியில் வாழும் குறவர்கள் தம் மனைவிமார்கள் தவறாது தங்கள் கணவர்களைத் தினம் தினம் தொழுதெழுவதால் அக்குறவர்கள் தொடுக்கும் அம்புகள் குறி தவறிச் செல்லாதாம் எனச் சங்கப் பாடல் கூறுகிறது. சங்ககாலத்து மகளிர் தங்களுடைய கணவர்களையும், கண்ணுக்குக் கண்ணாகப் போற்றி வந்தனர். திருமணத்திற்கு முன் துள்ளித் திரிந்த மகளிர் திருமணமான பிறகு தன் கணவனே உயிர் என்று அதன்பிறகு ஏங்கும் பாவைகளாகவும் திகழ்கின்றனர்.

***"இம்மை மாறி மறுமை ஆயினும்***
***நீ ஆகியர் எம் கணவனே"***
***(குறுந் : 49 : 3-4)***

இந்தப் பிறப்பு மட்டுமின்றி இனி வருகின்ற ஏழ் எழு பிறப்புகளிலும் நீயே என் கணவனாக வர வேண்டும் எனச் சங்ககால மகளிர் ஆசைப்பட்டனர். மேலும் பொருள் தேடத் தன் தலைவன் பிரிந்து சென்றால் அவன் இல்லாத நாட்களை ஒவ்வொரு நாளும் யுகமாக கழித்தும், முள்படுக்கையில் இருப்பது போன்று எண்ணியும், பிரிந்து சென்ற தலைவனின் காட்டு வழிக் கொடுமையினை எண்ணி வருந்தியும், கார்காலத்தை எதிர்நோக்கியும், சுவரிலே கோடிட்டுத் தலைவன் வரவை எதிர்நோக்கிக்

காத்துக்கொண்டிருந்தனர் என நற்றிணைப் பாடல் (நற் : 324) மூலம் அறியமுடிகிறது. அதுபோல் ஐங்குநுறூற்றில் ஒரு தலைவி திருமணமாகித் தலைவனுடன் தன் புகுந்த வீட்டிற்கு வரும் தலைவியிடம் நலம் விசாரிக்கிறார்கள். உறவினர்கள் என்பதனை "மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே"

***(ஐங் : 203)***

என்னும் பாடல் வரியில் குளத்திலே கலங்கிய தண்ணீரை வெப்பம் மிகுதியால் அந்தப் பக்கம் சென்ற மானானது பருகியது. அந்த எச்சில் தண்ணீர் கூட எனக்கு இனிய தேனோடு கலந்த பசுவின் பாலைவிட இனிமையானது என்கிறாள் தலைவி, தன் புகுந்த வீடும், நாடும், ஏழ்மை வறட்சி உடையது என்பதை அறிந்திருந்தும;;, உறவினர்களிடம் தன் கணவனின் நலம் கெடாதவாற தலைவி கூறுகிறாள். இதைவிட ஒரு பெண் தன்னுடைய புகுந்த வீட்டிற்கு வேறென்ன பெருமை சேர்க்க முடியும்.

விருந்தோம்பல் நம் தமிழ்ப் பண்பாட்டில் பகைவர்களாக இருந்தாலும் வீட்டிற்கு வந்தால அவர்களைவ வா என்று அழைக்கும் வழக்கும் நம்மக்களிடையே உள்ளது. மகிழ்ச்சியிலும் பெரும்மகிழ்ச்சி மற்றவர்களுக்கு உணவு அளித்து ஆனந்தப்படுவதே ஆகும். அப்படிப்பட்ட உயர்வான பண்பினை எப்போதும் குறையாத அளவிற்குப் பெற்றிருந்தனர் சங்க காலப் பெண்கள். தொல்காப்பியர் கூட,

***"விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓப்பலும்***
***பிறவும் அன்ன இழவோள் மாண்புகள்"***

***(தொல்.பொருள்:11)***

எனக் கூறுகிறார்.

ஒழுக்கமும், பொறுமை குணத்தையும், அடக்கமான உடைமையினையும் கொண்ட பெண்கள் விருந்தினரை நன்றாகக் கவனிப்பார்கள். விருந்தினரை வரவேற்று அவர்கள் விடைபெறும் போது அவர்கட்கு வெற்றிலைப் பாக்கு கொடுக்கும் வழக்கம் உள்ளது. விருந்தினரை வழி அனுப்பும் போது ஏழடி உடன்பின் சென்று அனுப்புதல வழக்கம் போன்றவை தமிழரின் பண்பாட்டைக் கூறுகிறது. "செழுஞ்கோள் வாழை அகல் இனப்பகுக்கும்". (புறம்:168:13) பன்றி தோண்டிய வயலில் திணை விதைத்து, அவற்றை அறுவடையும் செய்த உழவுப் பெண்கள் தினைச் சோற்றோடு பாலை உலை நீரோடு வார்த்த மானிறைச்சியைத் தன்னுடைய விருந்தினர்க்குப் படைத்தனர். மேலும், தங்கள் கணவன் இல்லாத நேரங்களில் விருந்தோம்பல் செய்வதில்லை என்ற செய்தி அவர்களின் கற்புத்திறத்தைக் காட்டுவதாக அமைகிறது.

### குழந்தைச் செல்வம்

செல்வம் எவ்வளவு இருப்பினும் அது குழந்தைச் செல்வத்திற்கு ஈடாகாது. ஒரு பெண் பிறந்துவிட்டால் அவள் தாய்மையை எய்தாவிடில் அவளுடைய உடல் தீயிலே வேகாது.

***"இட்டும், தொட்டும், கல்வியும், துழந்தும்***
***நெய்யுடை அடிசில் மெய்படவிதிர்த்தும்".***

***(புறம்: 188: 14-5)***

குழந்தையானது குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி இட்டும், பிசைந்தும், வாயால் கவ்வியும், கையில் துழாவியும், சோற்றைத் தன் உடம்பிலே கொட்டியும் உண்ணுகின்ற அழகைப் பார்ப்பதற்கு அந்தத் தாய்க்கு ஆயிரம் கண்கள் வேண்டும். இப்படிப்பட்ட பாசம் மிகுந்த தாயாக மட்டும் அல்லாமல் வீரம் மிகுந்த தாயாகவும் இருக்கின்றாள். புறநானூற்றிலே ஒரு தாய் முதல் தந்தை, அடுத்த நாள் கணவன், அடுத்த நாள் தன் மார்மேலும் தோள்மேலும் போட்டு வளர்த்த பிள்ளையைப் போருக்கு அனுப்புகிறாள். அப்போரிலே தன் மகன் மார்பிலே புண்பட்டு வீரமரணம் அடைந்ததை எண்ணி மார்பிலே பால் சுரந்ததாம் அந்தத் தாய்க்கு என்கிறார் ஆசிரியர்.

## விருந்தோம்பல்

விருந்தினரைப் போற்றுதல் சங்ககாலத் தமிழரின் உயர்ந்த பண்பாடுகளில் ஒன்றாக விளங்கியது. நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு போன்ற நூல்கள் இதற்குச் சான்றுகளை வழங்குகின்றன. குறிப்பாக நற்றிணையில்:

***"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்***
***முல்லை சான்ற கற்பின் மெல்லியல்..." (நற்றிணை - பா – 123)***

என்று விருந்தினர் வந்தபோது மகிழ்ந்து அவர்களை வரவேற்கும் இல்லறப் பண்புடைய பெண்ணைப் பற்றிக் கூறப்படுகிறது. மேலும் குறுந்தொகை 205-ஆம் பாடலில் இரவு நேரத்திலும் விருந்தினரை எதிர்பார்த்து அவர்களுக்கு உணவளிக்கும் பண்பு சுட்டப்படுகிறது. இதன் மூலம் விருந்தோம்பல் தனிப்பட்ட பண்பாக மட்டுமன்றி இல்லறக் கடமையாகவும் கருதப்பட்டதை அறியலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் பெண்கள் வெறும் குடும்ப உறுப்பினர்களாக மட்டும் காட்டப்படவில்லை. அவர்கள் காதல், குடும்பம், சமூகப் பொறுப்பு, அறிவு, மனவலிமை ஆகியவற்றில் சிறப்புடையவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். அகப்பாடல்களில் தலைவி தன் காதலையும் மனநிலையையும் நேரடியாக வெளிப்படுத்துகிறாள். தோழி தலைவியின் வாழ்க்கையில் முக்கியமான அறிவுரையாளராகச் செயல்படுகிறாள். இதன் மூலம் பெண்களின் உணர்வுச் சுதந்திரம், கருத்து வெளிப்பாடு, குடும்பப் பொறுப்பு ஆகியவற்றைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இவற்றையெல்லாம் கொண்டு ஆராய்ந்துப் பார்த்தால் பண்டைய தமிழரின் வாழ்க்கை வெறும் பொருளாதார வாழ்வாக இல்லாமல் அறம், அன்பு, பண்பு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட வாழ்வாக இருந்ததை உணர்த்துகின்றன.

## துணை நூல் பட்டியல்

[1.] இளம்பூரணர், தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை -24

[2.] சாமிநாதையர் உ.வே. சங்க இலக்கிய மூலமும் உரையும் உ.வே.சா பதிப்பகம், சென்னை.

[3.] முத்துகமலம் இதழ்க் கட்டுரை சங்க இலக்கியங்களின் வாழ்வியல் நெறிகள், 2011

[4.] சாமிநாதையர்.உ.வே. சங்க இலக்கிய மூலமும் உரையும், உ.வே.சா பதிப்பகம், சென்னை.